செ.வெ.எண் : 50/ஜூலை நாள் : 25.07.2017

## இராமநாதபுரம் மாவட்டம்

## இராமேஸ்வரம் பேய்க்கரும்பு கிராமத்தில் நடைபெறவுள்ள மேதகு முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர்.ஏ.பி.ஜே.அப்துல்கலாம் அவர்களின் தேசிய நினைவகம் திறப்பு விழா குறித்து

## மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.ஓம் பிரகாஷ் மீனா,இ.கா.ப., அவர்களின் முன்னெச்சரிக்கை அறிவிப்பு

இராமநாதபுரம் மாவட்டம், பேய்க்கரும்பு கிராமத்தில் அமைந்துள்ள முன்னாள் இந்திய குடியரசுத் தலைவர் டாக்டர்.A.P.J. அப்துல்கலாம் அவர்களின் நினைவிடத்தில், இரண்டாம் ஆண்டு நினைவு தினம் வருகிற 27.07.2017-ம் தேதி அனுசரிக்கப்பட உள்ளது. அன்றைய தினம் டாக்டர்.A.P.J. அப்துல்கலாம் அவர்களின் மணிமண்டபம் திறப்பு விழா நடைபெறுகிறது. மேற்படி மணிமண்டபம் திறப்பு விழாவில் மாண்புமிகு பாரத பிரதமர் திரு.நரேந்திர மோடி அவர்கள் மற்றும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் உட்பட பல்வேறு மாநில ஆளுநர்கள், முதலமைச்சர்கள், மத்திய மாநில அமைச்சர்கள், பாராளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் முக்கிய பிரமுகர்கள் கலந்து கொள்ள உள்ளனர்.

மேலும், 27.07.2017-ம் இராமேஸ்வரம் ஸ்ரீ இராமநாதசுவாமி கோவிலில் ஆடித் திருவிழாவின் முக்கிய நிகழ்வான மாலை மாற்றும் நிகழ்ச்சியை முன்னிட்டு அன்றைய தினம் காலை 06.00 மணிக்கு சுவாமி கோவிலில் இருந்து புறப்பட்டதும், கோவில் நடை அடைக்கப்பட்டு, இராமர் தீர்த்தம் அருகில் மாலை மாற்றும் நிகழ்ச்சி முடித்து மாலை 05.30 மணிக்கு மேல் மீண்டும் கோவில் நடை திறக்கப்படுகிறது.

மேற்படி இரண்டு நிகழ்ச்சிகளையும் முன்னிட்டு வெளியூர், வெளி மாவட்டம் மற்றும் வெளி மாநிலங்களில் இருந்து 26.07.2017 மற்றும் 27.07.2017 ஆகிய தினங்களில் காலை 09.00 மணி முதல் பிற்பகல் 02.00 மணி வரை சாலை மார்க்கமாக இராமநாதபுரத்தில் இருந்து இராமேஸ்வரம் நோக்கி செல்வதையும், இராமேஸ்வரத்தில் இருந்து இராமநாதபுரம் நோக்கி வருவதையும் தவிர்க்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**